# இணைப்பு - 2.6

## 19.9.98 மற்றும் 20.9.98 ஆகியநாட்களில் கன்னியாகுமரியில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் ஆறாவது கூட்ட நடவடிக்கை குறிப்பு

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் ஆறாவது கூட்டம் 19.9.98 மற்றும் 20.9.98 ஆகிய நாட்களில் கன்னியாகுமரியில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர். | தி.மு.க. |
| 2. திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர், | தா.மா.க. |
| 3. திரு.எல்.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், | அ.இ.பா.பிளாக். |
| 4. திரு.ஜி.இராமகிருஷ்ணன், | இ. கம்யூனிஸ்ட் (மார்க்கிஸ்ட்) |
| 5. திரு.பி.அய்யாக்கண்ணு, | ஜனதா தளம் |

3. ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில் 27 தலைப்பின் கீழ் பொதுவான பொருட்கள் இக்கூட்டத்திற்கான விவாத பொருள்களாக வைக்கப்பட்டுள்ளது என்றும் அதன் மீது உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை மாவட்ட ஊராட்சியுடன் இணைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை மாவட்ட ஊராட்சிக்கு மாற்றம் செய்வது என்பது இயலாது என்றும் தற்போதுள்ள நிலையிலேயே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட ஊராட்சிகள் செயல்படும் என்று தெரிவித்தார்.

4. பின்னர் கீழ்கண்ட பொருள்களை அரசுக்கு பரிந்துரை செய்யலாம் என்று குழு உறுப்பினர்கள் ஒருமனதாக முடிவு செய்துள்ளனர்.

## 1.ஊரக வளர்ச்சி அமைப்புகளின் நிர்வாகம் சார்ந்த பொருள்கள்

(i) ஊராட்சியில் பகுதி நேர உதவியாளராக பணியாற்றுபவர்களை முழு நேர பணியாளராக மாற்ற வேண்டும்.

(ii) மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பில் உள்ள பணியாளர் நிர்வாகத்தினை திருத்தி அமைக்க ஒரு குழுவினை அமைக்கலாம். இக்குழுவில் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம், சென்னை வளர்ச்சி ஆய்வு நிறுவனம், சென்னை பொருளாதாரப் பள்ளி, மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், காந்தி கிராம மையம் மற்றும் இதர நிறுவனங்களின் வல்லுநர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கலாம்.

---

### 2.கிராம ஊராட்சி மூலம் அரசு நலத் திட்ட பயனாளிகளை பரிந்துரைத்தல்.

அரசு நலத்திட்டமாகிய திருமண உதவித் திட்டம், முதியோர் ஓய்வு ஊதியம் ஆகிய பயன்களை பெற பயனாளிகளுக்கு கிராம ஊராட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை மட்டுமே போதுமானது. அதற்கு மேல் அதிகாரிகளின் அனுமதி தேவையில்லை.

---

3. தொழில் நுட்பம் மற்றும் நிர்வாக உதவி மற்றும் இதர அதிகாரங்கள்.

1. பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அதிகாரம் ஏற்கனவே ஊராட்சி தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஊராட்சி மன்ற தலைவர்கள் காவல் துறையினரின் உதவியை நாடினால் காவல் துறை இதற்கு உதவியாக செயல்பட வேண்டும்.
2. பஞ்சாயத்து தலைவருக்கு நூலகம், பொதுமக்கள் கூடும் இடம், பள்ளிக்கூடம், விலங்குகள் நல்வாழ்வு கூடம் கட்டுவதற்கு இடம் எடுத்துக் கொள்ள முழுஅதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதற்காக வருவாய் துறையை சார்ந்த பி மெமோ, டி மெமோ, 2சி பட்டா வழங்குவதற்கு முன்பு தலைவர்களின் ஆலோசனை பெற வேண்டும்.

3. அரசால் பஞ்சாயத்துக்கு சிறப்பு நிதியாக வெள்ளப் பெருக்கு காலங்களிலும், வறட்சி காலங்களிலும், விவசாயிகளுக்கு உதவுவதற்கும், வாய்க்கால், குளம் தூர் எடுப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

4. பாசன வாய்க்கால் கரைகளையும், பாசன ஏரி துறைகளையும், பராமரிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

5. குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் (Hut Service) கீழ் ஒரு பல்புக்கு மேல் பயன்படுத்தினால் அது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு புகார் செய்ய ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

6. கிராம மக்கள் அங்காடியை பார்வையிடும் அதிகாரம் ஊராட்சி மன்ற தலைவருக்கு வழங்கப்பட வேண்டும்.

7. பஞ்சாயத்துகளில் மின்பம்பு மற்றும் மின்சாரம் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு ஒன்றிய பொறியாளரைக் கொண்டு திட்ட மதிப்பு செய்து, முடித்த வேலைகளை அளப்பது, சான்று அளிப்பது போன்றவை செய்ய அதிகாரம் வழங்குவதுடன் பஞ்சாயத்து தலைவர்கள் இது சம்மந்தமாக கடிதம் கொடுத்தால் கூடிய விரைவில் பார்வை இடவும், பார்வை இட மறுக்கும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு மட்டத்தில் நெறிமுறைகள் வெளியிடுதல் வேண்டும்.

8. எந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அது கிராம பஞ்சாயத்து தலைவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்

9. ஊராட்சியில் வீடுகளுக்கு தண்ணீர் குழாய் இணைப்பு கொடுக்க ஊராட்சி தலைவருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.

10. அரசு மானிய விலையில் வழங்கும் உதவி திட்டத்திற்கு பயனாளிகளை தேர்வு செய்ய அந்தந்த பஞ்சாயத்து தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

11. மக்கள் நல பணியாளர்கள் ஊராட்சி மன்ற தலைவர் கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அவர்களை நிர்வகிக்கும் பொறுப்பு தலைவருக்கு இருக்க வேண்டும்.

12. தொலைக் காட்சிப் பெட்டிகள் பழுது ஏற்பட்டால் அதன் உதிரி பாகம் தனியாரிடம் வாங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

நிலமதிப்பு, வீட்டுமனைப் பட்டா, கிராம நல்லிணக்கம்.

1. இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் போது ஊராட்சித் தலைவர்களை கலந்தாலோசித்துச் செய்வதுடன் ஊராட்சித் தலைவரிடம், சொந்த வீடு இருக்கிறதா என்று அறிக்கை பெற்றபிறகுதான் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும்.

உள்ளாட்சி நிர்வாகம்

(1)மாவட்ட ஊராட்சி மன்றங்களுக்கு அதிக நிதியை அரசு அளித்து வருகிறது. ஆனால் அவர்களுக்கு போதிய நிர்வாக ஊழியர்களோ அல்லது நிர்வாக அலுவலர்களோ அதை கண்காணிக்கின்ற பொறுப்புகளோ இல்லை. ஆகவே மாவட்ட ஊராட்சி மன்றத்திற்கு தேவையான அலுவலர்களையும் மற்றும் அதிகாரங்களை ஒப்படைக்கலாம்.

(2)மாவட்ட ஊராட்சிகளுக்கு 1994ம் ஆண்டு ஊராட்சி சட்ட விதி 97ன்படி ஐந்து நிலைக் குழுக்கள் அமைக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அந்த 5 நிலைக் குழுவிற்கு எந்தவகையான பணிகள் , அந்தக் குழுக்களின் அதிகாரம் என்ன?, என்பது வரையறுக்கப்படாததால் இது நாள்வரை அந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. ஆகவே அந்தக் குழுக்களை அமைக்கவோ அதற்காக பணிகளை தெளிவு படுத்தவோ முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3), மாவட்ட ஊராட்சிக்கு என்று தனி செயலரை நியமனம் செய்யவும், இதனால் மாவட்ட ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை செயல்படுத்தும் முழு அதிகாரமும் மாவட்ட ஊராட்சிக்கு அளித்திட வேண்டும்.

(4). மாவட்ட ஊராட்சிக்கு என்று மிக குறைந்த நிதியே ஒதுக்கப்படுகிறது. இந்த நிதியினை உயர்த்துவதுடன், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் ஒதுக்கப்படுகிற நிதியை முழுமையாக மாவட்ட ஊராட்சிக்கே ஒதுக்கீடு செய்திட வேண்டும்.

(5). தேர்தலைப் பொறுத்தவரை, ஊராட்சி உறுப்பினர், ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்,மாவட்ட ஊராட்சி தலைவர் ஆகியோர்களுக்கு நேரடி தேர்தல் நடத்தப்படவேண்டும். மேற்படி தேர்தலில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைவர் ஒன்றிய உறுப்பினராகவும், ஒன்றிய பெருந்தலைவர் மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும் செயல்பட வேண்டும்.

(6) மாவட்ட கொள்முதல் குழுவில் மாவட்ட ஊராட்சி தலைவரை குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(7).மாவட்ட ஊராட்சி தலைவருக்கு, தலைமையிடத்தில் மாவட்ட ஊராட்சிக்கு என தனி அலுவலகம் இல்லாத மாவட்டங்களில் தனி அலுவலகம் ஏற்றபடுத்திட வேண்டும்.

(8). மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு வாகன எரிபொருளாக டீசல் 125 லிட்டர் அல்லது பெட்ரோல் 195 லிட்டர் என வழங்கப்படுகிறது. இதில் தொகை வித்தியாசம் காணப்படுகிறது. மேலும் குறைந்த ஊராட்சிகளைக் கொண்ட மாவட்ட ஊராட்சிகளுக்கும், வேலூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற அதிக ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டங்களுக்கும் ஒரே அளவாக எரிபொருள் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உயர்த்தி வழங்க வேண்டும்

(9)அனைத்து மாவட்ட ஊராட்சி தலைவர்களின் கூட்டம் சென்னையில் வருடத்திற்கு ஒரு முறை முதலமைச்சர்/ உள்ளாட்சித்துறை அமைச்சர் ஆகியோரால் கூட்டப்பட்டு, பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட வேண்டும்.

(10)மத்திய அரசும், மாநில அரசும் பஞ்சாயத்துகள் செயல்பட ஆரம்பித்த பின்னர் அடிப்படைத் தேவைகளுக்குக்கான. திட்டங்களை தீட்டுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பல அலுவலர்கள் உள்ளாட்சிக்கு உட்பட்ட செயல்படும் அலுவலர்களாக மாற்றப்படல் வேண்டும்

(11) அரசு விழாக்களுக்கு தற்போது ஒன்றியங்களின் செலவுத் தொகையாக அனுமதிககப்படும் தொகை ரூ.1000/க்குப் பதிலாக 2000 ரூபாயென அனுமதிக்கப்பட வேண்டும்.

(12)அவசரம் அவசியம் கருதி ஒன்றியத்தில் ஏற்படுகின்ற பணிகளை உடனடியாக ஏற்றுச் செய்வதற்கு பொதுப்பணித் துறைக்கும் நெடுஞ்சாலைத் துறைக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் போல் ரூ.50 ஆயிரம் வரை நியமனதாரர் (ஆஃபர்) மூலமாகவும் வேலை செய்ய ஒன்றிய குழுவிற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

(13) ஒன்றிய பொறியாளரின் மதிப்பீடு அதிகாரம் ரூ. 30,000/லிருந்து ரூபாய் ஒரு லட்சமாகவும் கோட்டப் பொறியாளரின் மதிப்பீடு அதிகாரம் 5 லட்சத்தில் இருந்து 10 லட்சமாகவும் ஆகவும் உயர்த்தப்பட வேண்டும்.

(14) சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் எல்லைவரை அடங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வேலைகளுக்கு சிட்டி ரேட் முறையை அமுல்படுத்தி மதிப்பீடு தயார் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

(15) அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக ஊராட்சிகளுக்கென்று தனியாக வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். தற்போதுள்ள ஊராட்சி வார்டுகளை ஊராட்சி மன்றத்தின் ஒப்புதலுடன் மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

## 2. பணியாளர் சார்ந்த பொருட்கள்.

உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள் மற்றும் சுகாதார நிலையங்கள் சார்ந்த பணிகள் திறம்பட செய்ய தங்களுக்கென்று தனிப்பட்ட அலுவலகங்கள் அமைக்கவும் மற்றும் பணியாளர்களை நியமிக்கவும் அனுமதியளிக்கலாம். மாறுதல் முறையிலும், மாற்றுப் பணி முறையிலும் பள்ளி துறை மற்றும் சுகாதாரத் துறையின் அரசு அலுவலர்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்ப அனுமதிக்கலாம். இப்பணிகளில், வரும் காலங்களில், புதிய பணியிடங்கள் மற்றும் எழும் பணி காலியிடங்ளை உள்ளாட்சி அமைப்புக்களே நிரப்பிக் கொள்ள அனுமதிக்கலாம்.

இது ஜனநாயகப் பரவலாக்கத்திற்கு வழிவகுக்கும். உள்ளாட்சி அமைப்புகள் புதிதாக ஆரம்ப பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையில் மற்றும் துணை சுகாதார நிலையங்ளை அமைத்து இதற்கு தேவையான பணியாளர்களை நியமிக்கவும், வரும் காலங்களில் ஏற்படும் பணியிடங்ளை பூர்த்தி செய்யவும் அனுமதிக்கலாம். இத்தகைய அமைப்பு, உள்ளாட்சி நிறுவனங்கள் மேற்கண்ட பள்ளி மற்றும் சுகாதார நிலையங்ளை அமைத்து நிர்வகிக்கவும் வழிவகை செய்யும்.

### கிராம பஞ்சாயத்துகளுக்கு பணியாளர்களை நியமித்தல்

பஞ்சாயத்துகளுக்கு இன்றைய சூழ்நிலையில் அதிகமான பணிகள் உள்ளன. ஆனால் பஞ்சாயத்துகளுக்கு போதிய நிர்வாக அலுவலர்கள் கிடையாது. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள இளநிலை பொறியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், குடிநீர், பராமரிப்பு அலுவலர், போன்ற ஒரு சில பணியாளர்களை பஞ்சாயத்துகளுக்கு நியமிக்கலாம்.

### பணியாளர் சார்ந்த பொருள்கள்

தற்போது உள்ளாட்சிப் பணியாளர்களை மாற்றுதல் முறையிலும், மாற்றுப்பணி முறையிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்ப அனுமதி அளிக்கலாம். உள்ளாட்சி அமைப்புகளில் திட்டம் தீட்டும்போது வல்லுனர்களை முடிந்தவரையில் செலவில்லாமல் சேவை அடிப்படையில் பயன்படுத்த முணைய வேண்டும். முடியவில்லையெனில் ஒப்பந்தமுறையில் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

தெருவிளக்கு போடுதல், அதற்கான பொருள்கள் வாங்குதல் மின்விளக்கு பராமரித்தல், மோட்டார் பழுதுபார்த்தல் போன்ற பணிகளில் உள்ள சிக்கலைப் போக்க வழிவகை உடனடியாக செய்ய வேண்டும்.

மைய மாநிலத் திட்டப் பணிகளை நிறைவேற்றிட வரையறுத்திருக்கும் நிதி பற்றிய விதிகளை மாற்றி அமைக்க வேண்டும். முன்பணம் இல்லாமல் வேலை செய்ய வேண்டும் என ஜே.ஆர்.ஒய்-க்குச் சொல்வது , திட்டத்தினை நிறைவேற்றிட உதவிகரமாக இருக்காது. அதே போல் வேலை முடிந்த பிறகு தருகின்ற பணம் முழுமையாகவும் தருவது கிடையாது என்ற நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

மைய , மாநிலத் திட்டங்களை நிறைவேற்றும்போது அவற்றிற்காக கீழ்மட்ட லஞ்சத்தை உறுதியாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்.

பொதுச் சொத்துக்களை பராமரிக்க முதலில் வருவாய்த்துறையிலிருந்து . கிராம வரைபடம் கட்டாயமாக சிற்றூராட்சிக்கு அனுப்பவேண்டும். அக்குறிப்புகளை கண்டறிந்து சிற்றூராட்சிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றத் திட்டமிட்டால் வருவாய்த்துறையும், காவல் துறையும் உதவிடவேண்டும்.

உள்ளாட்சி செயல்பாடுகளுக்கு எளிமையான, மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய சட்டதிட்டங்களை உருவாக்கிடவேண்டும். அது மக்கள் பேசும் மொழியில் இருப்பது மிகவும் அவசியம்.

உள்ளாட்சி பற்றிய அரசு ஆணைகள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வந்து சேருமாறு செய்திடல் வேண்டும்.

களப்பணியில் ஏற்கனவே 10 ஊர்நல அலுவலர்கள் இருந்தார்கள். அவர்களை ஊராட்சிகளிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலகத்தில் பணிபுரிய அரசு ஏற்கனவே உத்திரவிட்டு நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஊராட்சி அளவிலான நிர்வாகம், அடிப்படை புள்ளி விவரங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் முழுமையாக சேகரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்ப இயலவில்லை. எனவே இவர்களை மீள களப்பணிக்கே திரும்ப அனுப்பி ஊராட்சியின் பணிகளை கண்காணித்து ஊராட்சி நிர்வாகத்தில் துணைபுரிய பணிக்கலாம்.

ஊராட்சிகளை ஊராட்சி விரிவு அலுவலர் மாதம் ஒரு முறையும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆண்டுக்கு ஒரு முறையும் புகார் முறைகேடு இருப்பின் அவ்வப்போது பார்க்கவும் பணிக்கலாம்.

அரசு விதித்த மூன்றடுக்கு ஊராட்சி நடைமுறை ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்றதாக உள்ளது. இது சிறப்பாக செயல்படவில்லை எனவே நடுவன் அரசு, மாநில அரசு சட்ட திருத்தத்தின் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக ஆக்கப்படுவதன் மூலம் நல்லிணக்கமுள்ள மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளாக செயல்படும். உண்மையான அடிமட்ட தேவைகளை அதற்கடுத்த அருகில் உள்ள தலைமைக்கு பிரதிநிதிகள் மூலம் எடுத்துக் கூறப்பட்டு தேவைகள் நிறைவு செய்யப்படும். எனவே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஒன்றிய மன்ற உறுப்பினர்களையும், ஒன்றிய மன்ற தலைவர்கள் மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாவட்ட ஊராட்சித் தலைவர் பொது மக்கள் மூலமும் தேர்ந்தெடுக்கலாம்.

ஊராட்சி மன்றத்தில் ஜவகர் வேலைவாய்ப்பு திட்டப்பணிகளை ஊராட்சி உதவியாளர் மூலம் செய்யப்படுவது போலவே டெண்டர் இல்லாமல் ஊராட்சி நிதிப்பணி மற்றும் நிபந்தனைக்குட்பட்ட மான்யப் பணிகளையும் ஊராட்சி உதவியாளர் பெயரிலேயே ஊராட்சி மன்றம் மூலம் செயல்படுத்த உடனடியாக அரசு ஆணை பிறப்பிக்கலாம். இது காலதாமதம் தவிர்த்து விரைவான பணி முன்னேற்றம் காண வழிவகுக்கும்.

வருவாய் துறையில் கிராம பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்ற அகவிலைப்படி ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களுக்கும் வழங்க ஆவன செய்யவேண்டும்

ஊராட்சிக்கு உள்ள வேலைப்பளுவைச் சுமக்க நியமனம் செய்யப்பட்ட பகுதி நேரப் பணியாளர், முழு நேரப் பணியாளர்களாக மாற்றம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். அப்படிச் செய்தால் சிற்றூராட்சித் தலைவர்களுக்கு ஊதியமாக அதிகம் தர வேண்டியது கிடையாது. இல்லையெனில் சிற்றூராட்சித் தலைவர்களுக்கு சம்பளம் என முழுநேர ஊழியருக்கு தருவது போல் கொடுக்கவேண்டும்.

<u>திட்ட பணியாளர்களை தேர்வு செய்யக் குழு அமைக்கும் அதிகாரம்.</u>

ஊரக வளர்ச்சித் திட்டமாகிய கடன் வழங்குதல், வீடு கட்டுவதற்கு பயனாளிகள் தேர்வு செய்தல் ஆகியவற்றிக்கு ஊராட்சித் தலைவர், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர், மாவட்ட கவுன்சிலர் ஆகியவர்கள் அடங்கிய குழு மூலம் பயனாளிகள் தேர்வு நடைபெற சட்டத் திருத்தம் செய்தல், ஊராட்சி ஒன்றியத்தில் வரும் சத்துணவு, மதிய உணவு அமைப்பாளர்கள், சமையல் உதவியாளர்கள், ஆகியோர்களது நியமனத்தை ஒன்றியத்திலுள்ள பணி நியமனக்குழுவிற்கு (appointment Committe) தேர்வு செய்யும் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரமும், நிதி ஆதாரமும் அளிபபதோடு திட்டங்களை நிறைவேற்ற ஊழியர்களையும் அளிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கும் திட்டங்களை நிறைவேற்றும் அரசு ஊழியர்களின் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படவேண்டும். படிப்படியாக அரசின் கீழ் இன்றுள்ள பல துறைகளும், துறைசார்ந்த ஊழியர்களும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

## 3.ஆலோசகர்களையும், வல்லுநர்களையும் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது.

பல்வேறு பொருள் சார்ந்த திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல் திட்டம் உருவாக்குவதிலும் தொழில் நுட்ப ரீதியான செயல்பாடுகளிலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவ சம்பந்தப்பட்ட அரசுத் துறையில் வல்லுநர் போதிய அளவில் இல்லாத பட்சத்தில், தேவைக்கேற்ப எங்கெங்கே சாத்தியமோ அந்தந்தப் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள், தங்களின் குறிப்பிட்ட திட்டங்களுக்காக, குறிப்பிட்ட காலவரையரைக்குட்பட்டு வல்லுநர்களை, ஆலோசகர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிகளை செவ்வேனே முடிக்கஅனுமதிக்கலாம்.

## 4. திட்டங்களின் ஒருங்கிணைப்பு

பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்றுக்கு மேற்பட்டத் திட்டங்களை ஒருங்கிணைத்து அதிக பட்ச வளர்ச்சியை கொண்டுவர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதி வழங்கி, இதற்குரிய சட்டத் திட்டங்களும், வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு வெளியிட வேண்டும்.

## 5. உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்டங்கள் ஆய்வு குறித்த அதிகாரங்கள்

ஊராட்சி,ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி முறையே தமது ஆண்டு வளர்ச்சித் திட்டங்களை தயாரித்து தமது மன்றங்களின் ஒப்புதலோடு மாநில அரசுக்கு அனுப்ப வேண்டுமாய் பஞ்சாயத்துச் சட்டம் பணிக்கிறது. ஊராட்சிகள் கிராம சபையைக் கூட்டி அதில் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று விதிக்கிறது. இவை உயர்ந்த நோக்கங்களை கோடிட்டுத் தருகிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சிகளும், சாதி சமாச்சாரங்களும், சமயப் பூசல்களும் சில சமயங்களில், சில இடங்களில் தலைதூக்கும்போது, கிராம சபை கூடுவதில் சிரமமிருக்கக் கூடும். இது, கிராம சபை என்னும் அடிமட்ட கிராம ஜனநாயகத்தை மறுப்பதற்கான நியாயமாகி விடக்கூடாது. விதிவிலக்கே விதியாகி விடத் தேவையில்லை. இப்படிப்பட்ட பிரத்தியேக நிலைமையில், கிராம சபைக்கான கலந்து கொள்ளவேண்டிய ஊர்வாசிகளின் குறைந்தபட்ச அளவு விதி தளர்த்தப்படலாம்.

## 6.கணக்குகள் மற்றும் தணிக்கை

அனைத்து ஊராட்சிகளிலும் உடனடி தணிக்கை முறை மற்றும் தொடர் தணிக்கை முறை அறிமுகப்படுத்த வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் கட்டுமானப் பணிகளை தணிக்கை செய்ய "தொழில் நுட்ப தணிக்கைக் குழு" அமைக்கப்படல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட கிராம சபையின் மூலம் முடிக்கப்பட்ட வேலைகளை ஆண்டுதோறும் "சமுதாய தணிக்கை" செய்யவும் விதிவகைகள் வழங்க வேண்டும்.

## 7. கட்டுமானப் பணிகள் சம்பந்தப்பட்ட செயல்முறை கையேடு

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு நிர்வாகம், தொழில் நுட்பம் மற்றும் நிதி தொடர்பாக பரவலாக்கப்பட்ட முறையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் , பணிகள் விரைவாக முடிக்கும் பொருட்டு செயல்படுத்த வேண்டும். இதற்கான செயல் வழிமுறைகள் எளிதான முறையில்

தொகுக்கப்பட வேண்டும். மேலும் பணிகள் சம்பந்தப்பட்ட குழுவின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். கட்டுமானப் பணிகள் சம்பந்தப்பட்ட செயல்முறை கையேடு தொகுக்கப்படல் வேண்டும். இது திட்டமிடுதல், மதிப்பிடுதல், செயலாக்கம், மற்றும் கணிப்பாய்வு பணிகளுக்கு உதவும்.

## 8.செயலாக்கமும் பொறுப்புகளும்

மக்களின் பிரதிநிதிகளுக்கிடையே நிர்வாகம் மற்றும் நிதி பொறுப்புக்கள் தெளிவாக வரையறுக்கப்படல் வேண்டும். இது வாக்காளர்கள் வாக்களிக்கும் தருணத்தில் தங்களின் வேட்பாளரை தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்க உதவும்.

உள்ளாட்சி அமைப்பினால் துறைத் தலைவர்கள் , மாவட்ட அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்குரிய பொறுப்புகள் மற்றும் அலுவலர்களது கடமைகள் பற்றியும் தெளிவான நடைமுறை விதிகள் வழங்கப்படல் வேண்டும். இது அனைத்து திட்டங்களையும் முறையாக செயல்படுத்த உதவும். அரசின் ஒவ்வொரு திட்டத்திலும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு, பணி பற்றி குறிப்பிடல் வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு எழும் தொழில் நுட்ப ரீதியான சந்தேகங்களை தீர்ப்பதற்கு மற்றும் தேவையான ஆலோசணைகள் வழங்கவும் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப துறைகளை பொறுப்பாக்க வேண்டும்.

சில குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் வழிமுறைகள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் குறிப்பிட்டுள்ள ஜனநாயக பரவலாக்கத்திற்கு மாறுப்பட்டுள்ளது. இதனை சரிசெய்ய போதுமான சட்டத்திருத்தங்களை கொணர வேண்டும்.

---

## 9. ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களை பராமரிக்கும் பொருட்டு நிதி வழங்கல்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் , வறட்சிப் பகுதி மேம்பாடு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வறட்சி நிவாரணத் திட்டங்கள் மற்றும் இதர திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இவைகளை முறையாக பராமரிக்க சொத்தின் மொத்த மதிப்பீட்டில் குறிப்பிட்ட சதவீதத்தை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு பராமரிப்பு நிதியாக ஒதுக்கப்படல் வேண்டும். இதை பராமரிப்பதற்கான பொதுவான வழி நெறிமுறைகளை அரசு வெளியிட வேண்டும்.

---

உள்ளாட்சிக்குத் தேவையான புறம்போக்கு நிலங்கள், அது ஓடை புறம்போக்கானாலும், குளங்கள், நீர்ப்பாசனமே இல்லாது தூர்ந்து போனவற்றை உள்ளாட்சிகளே தங்கள் தேவைக்கு பள்ளிகள், மருத்துவமனைகள், உபமின்நிலையங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு எடுத்துக்கொள்ள சட்டதிருத்தம் செய்ய வேண்டும்

## 10. நிர்வாக தகவல் முறை

திட்ட செயல்பாடு, அடிப்படை சேவைகள், வசதிகள் போன்றவற்றின் விவரம் உடனுக்கடன் பெற "கிராம நிர்வாக தகவல் முறை திட்டம்" எல்லா மாவட்டங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும்.

கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் பேணப்படும் பதிவேடுகள், படிவங்கள், அறிக்கை முறை போன்றவைகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டு தொடர்ந்து பேணப்பட வேண்டும். இவ்வினங்களில், நிர்வாகத் தகவல் முறை சீரான முறையில் கையாளப்படல் வேண்டும்.

## 11.பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்களுக்கான குழுக்கள் அமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 94ன்படி மூன்றடுக்கு பஞ்சாயத்துகளிலும், ஊராட்சி ஆய்வாளரின் (மாவட்ட ஆட்சித் தலைவர்) ஒப்புதலின் பேரில் குழுக்களை அமைத்துக் கொள்ள வழிவகை செய்கிறது. இந்நடைமுறை கைவிடப்பட்டு, உரிய பிரிவில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அமைப்புகளின் ஒப்புதலின்படி பஞ்சாயத்து ராஜ் குழுக்களை அமைக்க வழிவகை செய்யலாம், வரி அமைப்பு, நிதி, கணக்குகள் மற்றும் திட்டமிடுதல், ஆ)கல்வி மற்றும் சுகாதாரம் இ) நலத் திட்டங்கள் மற்றும் பொது விநியோக முறை ஆகிய பொருட்களில் நிலைக்குழு அமைக்கும் உரிமையை கிராம ஊராட்சிக்கே வழங்கப்பட வேண்டும். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 96ன்படி ஊராட்சிகளுக்கு 4 குழுக்கள் அமைக்கும் அதிகரங்களைத் தவிர வீடு கட்டுதல் மற்றும் இதர கட்டுமானப்பணிகள், சாலைப்பணிகள், குடிநீர் வழங்கள் மற்றும் பொதுப்பணிகள் , நிதி , வரிகள், போன்றவற்றிக்கு பணிக்குழுக்கள் அமைக்கும் உரிமையையும், நிதி ஆதாரங்ளை பெருக்குவதில், மான்பங்களை வெளியிடுதல் மற்றும் பயன்படுத்துதல் போன்றவைகளுக்கு திட்டக் குழு அமைக்கும் உரிமையையும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிகள் நலத்திற்காகவும், வறுமை ஒழிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி, பொது விநியோகத் திட்டம் மற்றும் குடும்ப நலம் மற்றும் சுகாதாரம் போன்றவைகளுக்கு நலக்குழு அமைக்கும் உரிமையையும் வழங்கப்பட வேண்டும்.

### மாநில அளவில் அதிகார நிலைக்குழு

மாநில அளவில், தலைமைச் செயலரை தலைவராகக் கொண்டு, ஒரு அதிகார நிலைக்குழு ஏற்படுத்தப்பட வேண்டும். திட்டங்களிலும், செயல்பாடுகளிலும் துரிதமாகவும் , நிறைவுடனும் செய்வதற்கு ஏதுவாக, தேவைப்படும்போது விளக்கங்களும், உரிய வழிமுறைகளும் தருவது இக்குழுவின் பணியாகும்.

### மாநில வளர்ச்சி குழுமம்.

மத்தியில் உள்ள தேசிய வளர்ச்சி குழுமம் போன்று, மாநில அளவில், முதலமைச்சரை தலைவராகக் கொண்டும், மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள், மாநகரத் தந்தைகள், அமைச்சர்கள், முதுநிலை நிர்வாகத்தினர்கள், மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர்களையும் கொண்டு, மாநில வளர்ச்சி குழுமம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பிரிவு வாரியான, மாவட்ட வாரியான, ஒட்டுமொத்த மாநில அளவில் வளர்ச்சிகளை ஆய்வு செய்வதே இக்குழுவின் முக்கிய பணியாகும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொருளாதாரத்திலும், சமூக கண்ணோட்டத்திலும் , அதிகாரத்தைப் பரவலாக்கும் விதத்தில், நல்ல முறையிலான வெளிப்பாடுகளைக் கொணர தேவையான அதிகாரங்களையும் பொறுப்புகளையும் வழங்க இக்குழு அரசிற்கு ஆலோசனை வழங்கும்.

---

குழு தன்னுடைய அறிக்கையை முழுமையாக சமர்ப்பித்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஒன்றியங்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் அதிகாரங்களை ஒவ்வொன்றாக கொடுத்த பின்பு அவைகளில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கல்கள் ஏதாகிலும் இருந்தால் அந்த சிக்கல்களை தவிர்க்கவோ அல்லது அதற்கு வேறு வழிவகை காணவோ முயல வேண்டி இருக்கலாம். ஆகவே ஒரு கண்காணிப்பு குழுவை அமைத்து அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் செயல்படுகிறதா என்று கண்காணிப்பதற்கு நிரந்தரமாக ஒரு குழுவை அமைக்கலாம்.

மாவட்ட திட்டக் குழுவினுடைய தலைவராக தற்பொழுது, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளனர். மாவட்டத்தின் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். அந்தந்த பகுதி வளர்ச்சிக்கு மக்களுடைய தேவைகளை அறிந்து, அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை அவர்களால் தான் போட முடியும். மாவட்ட வளர்ச்சிக்குழு எடுத்த பின்னர், மாவட்ட திட்டக்குழு அமைக்கப்பட்டு இன்றைய நாள்வரை அதனுடைய கூட்டம் நடைபெறவில்லை. மேலும் அந்த குழுவிற்கு எந்தெந்த அதிகாரங்கள் உள்ளது என்பது தெளிவாக இல்லை. மேலும் அமல்படுத்துவது, நிர்வகிப்பது, மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளை செய்வதற்கு போதுமான அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. உடனடியாக மாவட்ட திட்டக் குழுவை அங்கீகரித்து அதற்கு மாவட்ட ஊராட்சி மன்றத்தினுடைய தலைவரையே தலைவராக நியமித்து போதிய அலுவலர்களையும் நியமிக்க வேண்டும்.

ஊராட்சிகளிலிருந்தும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் வரக்கூடிய ஒவ்வொரு திட்டமும் மாவட்ட ஒன்றிய குழுவிற்கு அனுப்பப்பட்டு அந்த திட்டங்களை மாவட்ட ஒன்றியக்குழு பரிசீலித்து அதனுடைய பரிந்துரையை மாவட்ட திட்டக்குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும். மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்களால் பரிசீலிக்கப்பட்டு அந்த திட்டங்களை மாநில திட்டக் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும். தமிழ்நாடு 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 240, 241 ஆகியவை இவைகளை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்து.

மாவட்ட திட்டக்குழு உடனடியாக அமைக்கப்பட்டு கீழிருந்து திட்டம் தீட்டும் செயல்முறை உருவாக்கப்படல் வேண்டும்.

உள்ளாட்சி மன்றங்களில் முறைகேடுகளை, ஊழலை தடுக்க மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு ( Ombudsmen Comittee ) அமைக்க வேண்டும். இக்குழுவில் மாவட்ட நீதிபதி, இரண்டு மாவட்ட அதிகாரிகள் மற்றும் பொறுப்பு வாய்ந்த இருவரைக் கொண்ட கண்காணிப்புக்குழு அமைத்து, இக்குழு உள்ளாட்சி நிர்வாகத்தில் முறைகேடு, ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்படவேண்டும்.

## 12. ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும்

உள்ளாட்சி மன்றங்களுக்கு உறுதுணையாக திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அடிப்படை ஆதார வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம் ஆகியவற்றை பராமரிப்பதிலும் உறுதுணையாக இருக்கும் பொருட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நிலைக் குழுக்களிலும், இணை நிலைக்குழுக்களிலும் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

---

- உள்ளாட்சி அமைப்புகளில் கல்வி மற்றும் சுகாதார திட்டங்கள் செயல்படுத்துவதல், அந்தந்த அமைப்புகள் தேர்ந்தெடுக்கும் தன்னார்வக் குழுக்களின் உதவியை நாட, பொறுப்பாக்கலாம்.

## 13. ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் பயனடைவோர் குழுக்களின் நட்புறவும்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் சம்பந்தப்பட்ட இணைத் துறைகளுக்கும் உத்வேகத்தை அளிக்கும் வகையிலும் விரைவான ஊரக வளர்ச்சிக்கும் ஏதுவாக தேவையான வழிமுறைகளை அரசு வெளியிட வேண்டும்.

## 14. நலிவுற்றோருக்கான சிறந்த வளர்ச்சியினை வலியுறுத்தல்

தாழ்த்தப்பட்டோர் / மலை வாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்ற நலிவுற்றோரின் மேம்பாட்டிற்கென உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த 'ஒருமைப்படுத்தப்பட்ட' வளர்ச்சி நிதியானது உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளாட்சித் தலைவர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். ஜாதி வேறுபாட்டினால் தலித் மற்றும் பழங்குடி பிரதிநிதிகள் சுதந்திரமாக செயல்பட முடியவில்லை. மேலளவு கிராம கசப்பான அனுபவத்தை நாம் மறக்க இயலாது. இவர்கள் பல மாவட்டங்களில் சுயமாக செயல்பட இயலவில்லை. தலித் பிரதிநிதிகளையும், பெண்களையும் அதிகாரிகள் சரியாக மதிப்பதில்லை என்ற தகவல் வருகிறது. எனவே, இடஒதுக்கீடு மூலம் பொறுப்பேற்றுள்ள நலிவடைந்த பிரிவினர் சுயமாக செயல்பட அதிகாரிகள் உதவிடவேண்டும்.

உள்ளாட்சி தலைவர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கும், கருத்துகளுக்கும் உரிய மரியாதையை அரசு அலுவலர்கள் அலுவலகங்களில் தருவதில்லை என எழும் மனக்குமுறலுக்கு சரியான நடவடிக்கைகள் அரசு எடுத்திட வேண்டும்.

## 15. நடைமுறைகள் சார்ந்த பொருட்கள்

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பான செயல் விளக்கங்கள் உரிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும்.

உரிய தகுதிகளுடன் கூடிய பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் திறம்பட அமைக்கும் திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்று பயன்படுத்திக் கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## 16. மக்களின் பங்கேற்பு

கிராம வளர்ச்சிக்கான நிதியாண்டின் செயல்திட்டம், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் தெளிவான மதிப்பீடு, அந்தப் பகுதியில் செய்யப்பட வேண்டிய செலவினங்களின் செலவு இன வாரியான விபரங்கள், பகுத்தாய்ந்து முடிவு செய்தல் டிற்றும் பயனாளிகளின் தேர்வு முறை போன்றவற்றை அறிய கிராம சபையின் உரிமைகள் கொடுக்கப்படல் வேண்டும். மேலும் வளர்ச்சித் திட்டங்கள் சார்ந்த விபரங்கள், சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகள் செயல்பாட்டில் பங்கேற்கச் செய்தல், முறைசாராக் கல்வி சார்ந்த இதர திட்டங்கள், சமூக பொருளாதார நிலை குறித்த புள்ளி விபரங்கள் சேகரிப்பு, வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கம் குறித்த மதிப்பீடுகள் , வரி செலுத்தும்படியான நடவடிக்கைகள், கடன்களை திரும்பச் செலுத்த தேவையான நடவடிக்கைகள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, சமூக நல்லிணக்கத்தை பேணுதல், உள்ளூர் ஆதாரங்களைத் திரட்டுதல், வளர்ச்சிப் பணிகளை மேற்பார்வையிடுதல், மேலும் அந்தப் பகுதியில் தொற்று நோய் பரவுதல், இயற்கையின் சீற்றங்கள் குறித்தும் தகவல்கள் தெரிவித்தல் போன்ற பணிகளை செய்வது கிராம சபையின் கடமைகளாகும் என்று வரையறுத்தல் வேண்டும்.

---

இதுவரை மக்கள் நலத் திட்டங்கள் பல சரிவர அமுலாகாதற்கு காரணம் இத்திட்டங்களை அமுலாக்குவதில் பங்கேற்பு இல்லாததே. எனவே மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் மக்களின் பங்கேற்பை உத்தரவாதப்படுத்தும் அளவிற்கு அரசு வழிகாட்டுதலை அளிப்பதோடு உதவியினையும் அளித்திடவேண்டும்.

## 17. மூன்றடுக்கு உள்ளாட்சிஅமைப்புகளுக்கு இடையே தொடர்பினை ஏற்படுத்துதல்

ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி ஒன்றிய கூட்டத்தில் கலந்து கொள்ளவும், ஒன்றியத் தலைவர் மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவும், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் ஊராட்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வகை செய்ய பஞ்சாயத்து சட்டத்தை திருத்த வேண்டும். இவர்கள் வாக்குரிமை இல்லாத உறுப்பினர்களாக பங்கேற்பார்கள்.

## 18. உள்ளாட்சி அமைப்புகளை கலைக்கும் சட்ட விதி

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களை மாநில அரசு கலைத்தால், அந்த முடிவு சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவது நிபந்தனையாக்கப்படல் வேண்டும்.

## 19. தலைவர்/ துணைத் தலைவர்களுக்கு

புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் தலைவர் பதவி வகிப்போரின் வேலைப்பளு கடுமையாகும். வேறு பணிகளைத் தானே பார்க்க முடியாது. முழு நேர வேலையாகி விடும். இந்நிலையில், தலைவருக்கும், துணைத்தலைவருக்கும் கௌரவ ஊதியம் வழங்கப்படலாம். ஏழை எளியோரும் தாழ்த்தப்பட்டோரும் உழைக்கும் பெண்கள் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்த கோரிக்கையின் நியாயம் ஆராயப்படவேண்டும். ஏற்கனவே, பயணப்படி வழங்க எடுக்கப்பட்ட முடிவையொட்டி, இந்த வேண்டுகோளும் முக்கியத்துவம் பெறுகிறது.

## கிராமசபை

வருடத்துக்கு ஒரு முறை கிராம சபையை கூட்டி அரசு அளிக்கும் அனைத்து நலத்திட்டம் பற்றியும், அதன் விபரம் பற்றியும் தெரிவித்துவிட்டு ஊர் பொதுமக்கள் கூடுகின்ற இடத்தில் எல்லோரும் பார்வையில் படும்படி நல திட்டங்களையும் செயல் முறைகளையும் போர்டில் எழுதி அதை மேற்பார்வையிடும் பொறுப்பு ஒன்றிய தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

கிராமப் புறங்களில் மக்களிடம் ஏற்படும் மோதல், தகராறுகளையும் தீர்த்து வைப்பதற்கு மாதம் ஒருமுறை கூட்டம் கூட்டி முடிவு செய்யும் உரிமை கிராம சபைக்கு இருக்கும் அதிகாரம் வேண்டும்.

## 20. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான கருத்துக்கள்

அரசியல் சட்டத்தின் 243 ஜி,பிரிவு,11வது அட்டவணையில் கண்டுள்ள 29 இனங்கள் தவிர பொருளாதார வளர்ச்சி, சமூக நீதிக்கான திட்டங்களை நிறைவேற்றும் அதிகாரத்தை கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசு ஊராட்சி அமைப்புகளுக்கு அளிக்கலாம். எந்தெந்த அயிட்டங்கள் இந்தத் தலைப்பின் கீழ் வருவதென்பதைப் பட்டியலிடலாம். எடுத்துக்காட்டாக, குடிமராமத்து, மாசு கட்டுப்பாடு, நுகர்வோர் நலன், அறிவொளி இயக்கம், குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்பு முதலியன இடம் பெறலாம். இவை சிலதான். இன்னும் பல சேர்க்கப்படலாம். அடிமட்ட ஜனநாயக அமைப்பைப் பலப்படுத்த ஊராட்சிகளுக்கு கூடுதல் பொறுப்பை அளிப்பது இன்றியமையாத தேவை என்ற கண்ணோட்டத்திலிருந்து இந்த யோசனை அணுகப்படவேண்டும்.

## பொதுவான கருத்துக்கள்:

ஒன்றுக்கு மேற்பற்ற ஊராட்சிகளுக்குச் சேர்த்து ஒரே லைன்மேன் இருப்பதால், மின்சாரப் பழுதுகளைச் சரிசெய்ய காலதாமதமாவதைத் தவிர்க்க ஊராட்சி ஊழியர்களுக்கு பயிற்சியளித்து சின்னஞ்சிறு பழுதுகளைச் சரிபார்க்க உரிமம் வழங்கி ஆவன செய்ய தமிழ்நாடு மின்வாரியத்தோடு தக்கதொரு ஏற்பாட்டை உருவாக்க வேண்டும்.